**Reg. No. : ........................................**

**Code No. : 7356** **Sub. Code : PTLM 44**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Fourth Semester

தமிழ் — Core

இலக்கிய மானிடவியல்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையை தேர்வு செய்க.

1. மனிதன், பண்பாடு, சமூகம் ஆகியவற்றை ஆய்வுக்குட்படுத்தும்போது பயன்படுத்த வேண்டியவை

   (அ) இலக்கண அறிவு (ஆ) இலக்கிய அறிவு

   (இ) மானிடவியல் அறிவு (ஈ) மொழியறிவு

2. மானுடவியலை 'ஏகாதிபத்தியத்தின் குழந்தை' — எனக் கூறியவர்

   (அ) எல்மூர் (ஆ) காதரின் காஃப்

   (இ) வொய்ட் ஹட் (ஈ) கால்டுவெல்

3. இனவரைவியல் செய்திகளை அறிந்து கொள்ள உதவும் வழிமுறைகள் எத்தனை வகைப்படும்?

   (அ) ஐந்து (ஆ) நான்கு

   (இ) மூன்று (ஈ) இரண்டு

4. நெசவாளர்களை மையமாகக் கொண்டெழுதப்பட்ட நாவல்

(அ) வேள்வித் தீ (ஆ) களரி

(இ) தலைமுறைகள் (ஈ) பஞ்சும் பசியும்

5. இனவரைவியல் எத்தனை வகையான பரிமாணங்களைக் கொண்டது?

(அ) ஆறு வகை (ஆ) நான்கு வகை

(இ) மூன்று வகை (ஈ) இரண்டு வகை

6. தென்னிந்திய நாட்டார் கதைகளைத் தொகுத்தவர்

(அ) ராபின்சன் (ஆ) எட்கார் தர்ஸ்டன்

(இ) பணிக்கர் (ஈ) ஹெர்பர்ட்

7. இலக்கிய மானிடவியல் கையாளப்பட வேண்டிய அணுகுமுறை

(அ) பண்பாட்டோடு இயைந்த அணுகுமுறை

(ஆ) இனக்குழுவோடு இயைந்த அணுகுமுறை

(இ) சூழலோடு இயைந்த அணுகுமுறை

(ஈ) அழகியலோடு இயைந்த அணுகுமுறை

8. தமிழகத்தில் இரும்பு பண்பாடு தோன்றிய காலம்

(அ) 78-ஆம் நூற்றாண்டு (ஆ) 68-ஆம் நூற்றாண்டு

(இ) 58-ஆம் நூற்றாண்டு (ஈ) 48-ஆம் நூற்றாண்டு

9. எரிபுனச் சாகுபடியை குறிக்கும் சொல்

(அ) உற்பத்தி செய்தல் (ஆ) புனல் ஏனல்

(இ) சேகரித்தல் (ஈ) பயிரிடுதல்

10. ‘கலப்பை’ பயன்பாடு எந்நில மக்களிடம் காணப்பட்டது?

(அ) குறிஞ்சி நிலம் (ஆ) முல்லை நிலம்

(இ) மருத நிலம் (ஈ) நெய்தல் நிலம்

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) இனவரைவியலின் அடிப்படைத் தரவுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) இனவரைவியல் நாவல் வெளிப்படுத்தும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

12. (அ) இலக்கிய இனவரைவியலை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இனவரைவியலின் வகைகள் யாவை?

13. (அ) படிமலர்ச்சிக் கோட்பாடு என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) படிமலர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளைக் குறிப்பிடுக.

14. (அ) மானிடவியல் அடிப்படையில் திணைக் கோட்பாட்டினை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) இனவரைவியலில் குறிஞ்சித் திணை அமைப்பினை விளக்குக.

15. (அ) நெய்தல் நில உணவு உற்பத்தி பரிமாற்ற முறையினை மானிடவியல் அடிப்படையில் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'பதுக்கைகள்' — குறிப்பு வரைக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) 'இனவரைவியலாளரும் படைப்பாளியும்' — கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நீவிர் அறிந்த நாவல்களுடன் இனவரைவியலை ஒப்பிடுக.

17. (அ) படிமலர்ச்சிக் கோட்பாட்டு நிலைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) இலக்கிய மானிடவியலின் கொள்கைகளைப் பட்டியலிடுக.

18. (அ) திணை அமைப்பும் இனவரைவியலும் விவரி.

(அல்லது)

(ஆ) திணை அமைப்பின் படிநிலை வளர்ச்சியினை விவரிக்க.

19. (அ) திணைகளுக்கிடையேயான பரிமாற்ற உறவில் பண்டமாற்றின் இன்றியமையாமையை விளக்குக.

(அல்லது)

(ஆ) மானிடவியல் அடிப்படையில் சங்க இலக்கிய நாட்டார் உணவு உற்பத்தியினை விவரி.

20. (அ) சங்க இலக்கியத்தில் இரும்புப் பண்பாடு விவரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) 'பெருங்கற்படைச் சின்னங்கள்' — சங்க இலக்கியப் பதிவுகளை எடுத்துரைக்க.

---